## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(19.05.2024 முதல் 23.06.2024)

அறிக்கைஎண்: 23/2024    தேதி : 18.06.2024

### அரியலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34 - 38 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும் பதிவானது.

### அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (19.06.2024 முதல் 23.06.2024).

| கடந்த வார வானிலை (14.06.2024 முதல் 17.06.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (19.06.2024 முதல் 23.06.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 14/06 | நாள்-2 15/06 | நாள்-3 16/06 | நாள்-4 17/06 | தேதி | நாள்-1 19/06 | நாள்-2 20/06 | நாள்-3 21/06 | நாள்-4 22/06 | நாள்-5 23/06 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 3 | 1 | 0 | 1 |
| 34 | 36 | 38 | 38 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 38 | 38 | 37 | 38 | 38 |
| 27 | 27 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 26 | 27 | 27 |
| 6 | 6 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 5 | 4 | 7 |
| 72-48 | 72-42 | 67-44 | 74-44 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60-30 | 60-30 | 60-30 | 60-40 | 70-60 |
| 15 | 21 | 23 | 14 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 18 | 18 | 20 | 22 | 20 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு | தென் தென் கிழக்கு | காற்றின் திசை | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | தென் மேற்கு |

### அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 20.06.2024, 21.06.2024 மற்றும் 23.06.2024 ஆகிய தினங்களில் லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37 - 38 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30 - 60 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 18 – 22 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |

| | | |
|---|---|---|
| நெல் | நடவு வயல் | குறுவை நடவு செய்யும் பொழுது பதினெட்டு முதல் இருபத்தி இரண்டு நாட்கள் வயதுடைய நன்கு வாளிப்பான நாற்றுக்களை உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் (1 கிலோ/ 125 மிலி) மற்றும் பாஸ்போபாக்டீரியாவை (1 கிலோ/ 125 மிலி) 40 லிட்டர் தண்ணீரில் இட்டு நாற்றுகளின் வேர் பாகம் கரைசலில் நன்கு நனையுமாறு 15 முதல் 30 நிமிடங்கள் வரை வைத்திருந்து பிறகு 20 x 10 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். |
| பருத்தி | வளர்ச்சி பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் பூ மற்றும் பிஞ்சு உதிர்வதை தடுக்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 பிபிம் கரைசலை விதைத்த 60 மற்றும் 90 வது நாளில் தெளிப்பதால் மொட்டுகள் உதிர்வது குறைக்கப்பட்டு காய்கள் அதிகம் பிடிக்க உதவுகிறது. |
| கரும்பு | வளர்ச்சி பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக 5 மாதங்களுக்கு மேலான கரும்பு பயிறில் தோகையை நீக்கி விட்டம் கட்டவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | விவசாயிகள் கறவை மாடுகளுக்கு போதிய அளவு தாது உப்பு கலவையை அளிக்கலாம் |

**குறுஞ்செய்தி**

உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI).

.

**இயக்குநர்**